செ.வெ.எண்: 175 நாள்: 26.02.2020

**காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத்திட்டம் முதற்கட்ட பணிகள் விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை.**

**முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் மூலம் தமிழகத்தில் சராசரியாக 31 சதவீதம் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.**

**மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயக்குமார் அவர்கள் தகவல்.**

---

புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகத்தில் இன்று (26.02.2020) மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் முன்னிலையில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயக்குமார் அவர்கள் வருவாய்த்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார்கள். இக்கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அவர்கள் தெரிவித்ததாவது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தமிழக மக்களின் நலனுக்காக எண்ணற்ற பல திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறையின் சார்பில் பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இன்றைய தினம் புதுக்கோட்டை மாவட்டத்தில் வருவாய்த்துறையின் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பணிகள் குறித்து அரசு அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியில் முதியோர் உதவித்தொகைக்கென ரூ.4,300 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் தமிழகம் முழுவதும் உள்ள 35 லட்சம் முதியவர்கள்

பயன்பெறுவார்கள். குறிப்பாக முதலமைச்சரின் குடிமராமத்து திட்டத்தின் மூலம் மாநிலத்தில் சராசரியாக 31 சதவீதம் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நிர்வாக திறமைக்கு எடுத்துக்காட்டாக திகழ்கிறது.

இன்றைய தினம் இந்த ஆய்வுக்கூட்டத்தில் முதலமைச்சரின் சிறப்பு குறைதீர்வு திட்டத்தின் கீழ் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட மொத்த மனுக்களின் விபரம், தீர்வு மனுக்கள் மற்றும் நிலுவை மனுக்கள் குறித்து கேட்டறியப்பட்டது. இதில் நிலுவையில் உள்ள மனுக்களின் மீது உரிய விசாரனை மேற்கொண்டு தீர்வு காண அறிவுறுத்தப்பட்டுள்ளது. முதியோர் உதவித்தொகை வேண்டி வரப்பெற்ற மனுக்களில் தகுதியுள்ள அனைத்து பயனாளிகளுக்கும் முதியோர் உதவித்தொகை வழங்கவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும், ஒரு முறை வரன்முறைப்படுத்தும் திட்டத்தின் கீழ் பட்டா வழங்கும் பணிகள் விபரம் குறித்து கேட்டறிந்து பட்டா வழங்கும் பணிகளை துரிதமாக மேற்கொள்ளவும், இதே போன்று பிற பட்டா வழங்கும் பணிகளையும் முறையாக மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. புதுக்கோட்டை மாவட்ட மக்களின் மிக நீண்ட நாள் கோரிக்கையான காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள்.

காவிரி-வைகை-குண்டாறு இணைப்புத் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் முதற்கட்ட பணிகளுக்கு ரூ.700 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகள் வெகு விரைவில் தொடங்குவதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. அரசுத்துறைகளின் முதுகெலும்பாக வருவாய்த்துறை செயல்படுவதை கருத்தில் கொண்டு துறை அலுவலர்கள் பொது மக்களிடமிருந்து பெறப்படுகின்ற வருவாய்த்துறையின் மனுக்களுக்கு உடனுக்குடன் தீர்வு காண வேண்டும். இவ்வாறு மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயக்குமார் அவர்கள் தெரிவித்தார்.

இந்தஆய்வுக் கூட்டத்தில் அறந்தாங்கி சட்டமன்ற உறுப்பினர் திரு.இ.ஏ.இரத்தினசபாபதி, கந்தர்வக்கோட்டை சட்டமன்ற உறுப்பினர்

திரு.பா.ஆறுமுகம், மாவட்ட வருவாய் அலுவலர் பெ.வே.சரவணன், வருவாய் கோட்டாட்சியர்கள் தண்டாயுதபாணி, டெய்சிகுமார், மாலதி, புதுக்கோட்டை நகராட்சி ஆணையர் ஜீவாசுப்பிரமணியன், மாவட்ட ஊராட்சிக்குழுத் தலைவர் த.ஜெயலெட்சுமி உள்ளிட்ட தொடர்புடைய அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**